Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jmrgroup.org

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurali@gmil.com
RNI No.: TNTAM24840
உள்ளது உள்ளபடி

காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டீசை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்
MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி
8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26.

இளம்பெண்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கும் ‘நவ்யா 2.0’ திட்டம்: மத்திய அமைச்சர்கள் அன்னபூர்ணா தேவி, ஜெயந்த் சௌத்ரி தொடங்கி வைத்தனர்



சென்னை – 29 நவம்பர், 2026 இளம்பெண்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கும் ‘நவ்யா 2.0’ திட்டம்: மத்திய அமைச்சர்கள் அன்னபூர்ணா தேவி, ஜெயந்த் சௌத்ரி தொடங்கி வைத்தனர்.

மத்திய பெண்கள், குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அன்னபூர்ணா தேவி, திறன் மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் ஜெயந்த் சௌத்ரி ஆகியோர் இணைந்து, உத்தராகண்ட் மாநிலம் ஹரித்வாரில் ‘நவ்யா 2.0’ திட்டத்தைத் தொடங்கி வைத்தனர். உத்தராகண்ட் சமஸ்கிருத நிறுவனத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

இளம்பெண்களுக்கு தொழிற்பயிற்சி அளித்து அவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மத்திய பெண்கள், குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், திறன் மேம்பாடு, தொழில்முனைவோர் அமைச்சகம் ஆகியவை இணைந்து இத்திட்டத்தைச் செயல்படுத்துகின்றன.

நவ்யா 2.0 திட்டம், நாடு முழுவதும் 24 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் உள்ள 100 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். குறிப்பாக வளர்ச்சியில் பின்தங்கிய, எளிதில் சென்றடைய முடியாத பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தில் பயிற்சி பெறுவதற்கான வயது வரம்பு 16 முதல் 25 வயது வரை ஆகும்.

புதிய தொழில்நுட்பத் துறைகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு இதில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக்குப் பிறகு வேலைவாய்ப்பு, தொழில்பழகுநர் பயிற்சி அல்லது சொந்தத் தொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.